FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(மு.த.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

(Under Section 173 BNSS)

(BNSS பிரிவு 173 இன் கீழ்)

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8120355

1. District : நீலகிரி PS: கண்காணிப்பு காவல்நிலையம் பாரது Year: 2025 FIR No.: 05 Date: 19.05.25

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 (as amended in 2018) Sections பிரிவுகள்: 13(1)(c) r/w 13(2)

(ii) Act சட்டம்: Indian Penal Code Sections பிரிவுகள்: 420, 409 r/w 34

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from 26/2/2021 Date to : 30/10/2023

குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை

Time Period : Time from : Time to :

நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : 19.05.2025 Time : 1233 hrs

காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference : Entry No(s) Time :

பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral :

தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினியில் பிட்டச்சு செய்யப்பட்டது

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:

குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் நீலகிரி மாவட்டம் முழுவதும் உள்ள வேளாண்மை துணை இயக்குநர் அலுவலகங்கள்

Beat Number : (b) Address :

முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :

இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : (b) Father's/ Husband's Name :

குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் G. மணிகண்டன் தந்தை / கணவர் பெயர் கோபாலன்

(c) Date / Year of Birth : (d) Nationality : (e) Passport No. :

நாள் / பிறந்த ஆண்டு 20/6/1972 நாட்டினம் இந்து வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : Place of Issue :

வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : (g) Address : உதவி இயக்குநர் மற்றும் கண்காணிப்பு

தொழில் தோட்டக்கலை துணை இயக்குநர் முகவரி பாரது, நீலகிரி.

கண்காணிப்பாளர்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)

தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்

(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1. திரு. முருகேசன், முன்னாள் வேளாண் துணை இயக்குநர், நீலகிரி

2. திரு. செல்வம், முன்னாள் வேளாண் துணை இயக்குநர் (மாநில நிர்வாகம்) நீலகிரி

8. Reasons for delay in reporting by the complainant / Informant:

குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

— காலதாமதமில்லை —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

—

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

—

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் கருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

—

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed Tmt. T. Xavier Rem., Insp. Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS. W.S.C., Trichy .....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

19/5/2025

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
(G. MANIKANDAN)

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 19/5/2025

Name: பெயர் .....
Rank: நிலை Dy. Supdt. of Police.
W.S.C. Trichy.

கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்கு சிறப்பு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி முன்பாக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.05/2025–இன் முதல் தகவல் அறிக்கையின் காலம் 12ன் தொடர்ச்சி.....

இன்று 19.05.2025ம் தேதி 12.30 மணிக்கு திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணைக்கண்காணிப்பாளராகிய நான், திருச்சிராப்பள்ளி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் பணியில் இருந்த பொழுது, புகார்தாரர் திரு.அப்துல்லா என்பவர் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் WP(MD)No.9922/2024-ன்படி மனு தாக்கல் செய்து, அந்த மனு தொடர்பாக கடந்த **16.08.2024** அன்று சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை பிறப்பித்த உத்தரவின்பேரில் புகார்மனு மீது PE.103/2024/AGRI/TR ன்படி துவக்கக்கட்ட விசாரணை செய்யப்பட்டது. துவக்கக்கட்ட விசாரணையின் அடிப்படையிலும், அரசாணை எண்.G.O (3D) No.36, Agriculture-Farmers Welfare (AA2) Department, dated 09.04.2025–ன்படி வழக்கு பதிவு செய்ய அரசிடமிருந்து பெறப்பட்ட பிரிவு 17A(1) of Prevention of Corruption Act-1988 (as amendment in 2018) முன் அனுமதியின்படி **எதிரி–1 திரு.முருகேசன், முன்னாள் வேளாண் இணை இயக்குநர், திருச்சி (ஒய்வு) மற்றும் எதிரி–2 திரு.செல்வம், முன்னாள் வேளாண் துணை இயக்குநர் (மாநில திட்டம்), திருச்சி (ஒய்வு)** ஆகியோர் வேளாண்மை துறையில் திருச்சி மாவட்டத்தில், பண்ணைக்கருவிகள் கொள்முதல் செய்ய ஒப்படைக்கப்பட்ட பணியில் குற்றமுறு நம்பிக்கை மோசடி செய்து முறைகேடு செய்த குற்றத்தின்படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த விபரம் பின்வருமாறு.

திருச்சி மாவட்டம், மணப்பாறை வட்டம், புத்தாநத்தம் அஞ்சல், கிழக்கு தெரு, 1222, ஒருங்கிணைந்த மணப்பாறை தாலுக்கா மானவாரி மற்றும் இறவை பாசனதாரர்கள் விசாயிகள் சங்கம், மாநில தலைவர், திரு.எம்.அப்துல்லா என்பவர் கடந்த **23.11.2023** அன்று தமிழக வேளாண்மை உற்பத்தி ஆணையர், வேளாண்மை துறை உழவர் நலத்துறை செயலாளர், நாமக்கல் கவிஞர் மாளிகை (முதல்மாடி), தலைமைச்செயலகம், சென்னை–9, வேளாண்மை துறை இயக்குநர், இயக்குநர், சேப்பாக்கம், சென்னை–5, இயக்குநர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, **293** MKN சாலை, ஆலந்தூர், சென்னை–**16** ஆகிய முகவரிக்கு அனுப்பிய புகார்மனு விசாரணைக்காக வரப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் வருடாவருடம் வேளாண்மை துறை மூலம் ஒவ்வொருவருடமும் வேளாண்மை துறை மூலம் விவசாயிகளுக்கு வழங்கக்கூடிய திட்டமான **(1)**NADP தேசிய வேளாண் வளர்ச்சி திட்டம், **(2)** தேசிய உணவு பாதுகாப்பு இயக்கம் (NSFM) திட்டம், **(3)** அட்மா திட்டம், **(4)** மாநில வேளாண் வளர்ச்சி (SAD) திட்டம், **(5)**கலைஞர்

திட்டம், (6) IAMWARM (7)குறுவை தொகுப்பு திட்டம், (8) சம்பா தொகுப்பு திட்டம், (9) வேளாண் துறை நெற்குப்பை, (10) புலூர் உத்தமனூர் பண்ணைய பொருள் கொள்முதல் திட்டம், (11) வேளாண் துறையின் ஆய்வகம் மண் பரிசோதனை ஆய்வகம், (12) பூச்சிமருந்து ஆய்வகம், (13)உயிர்உரம் தர கட்டுப்பாடு ஆய்வகம் மற்றும் (14) இயற்கை உரங்கள் உற்பத்தி நிலையம் (OFTL) ஆகிய 14 வகையான திட்டங்களுக்கு மத்திய அரசு, மாநில அரசு நிதி ஒதுக்கீடு மூலம் ஒவ்வொரு மாவட்டத்திற்குள் வருடந்தோறும் மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் வேளாண்மை துறை கொள்முதல் கமிட்டி குழு DLAPC தலைவர் அவர்கள் தலைமையில் கொள்முதல் குழு கூட்டம் நடத்தப்பட்டும் அதன்மூலம் திருச்சிராப்பள்ளி மாவட்ட வேளாண் துறையின் மூலம் தேவையான மேற்கண்ட 14 திட்டங்களுக்கு மத்திய அரசு / மாநில அரசின் நிதி தொகையினை ஒதுக்கீடு பெறப்பட்ட மேற்கண்ட திட்டங்களுக்கு திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் வேளாண் துறையின் கொள்முதல் கமிட்டி குழு DLAPC தலைவர் மூலம் மாவட்ட விவசாயிகளுக்கு மான்யத்தில் வழங்கக்கூடிய இடுபொருட்கள் வேளாண்துறை மூலம் தேவையான கொள்முதல் கமிட்டி DLAPC கூட்டம் நடத்தாமலும், திருச்சிராபள்ளி மாவட்ட வேளாண்துறை மூலம் விவசாயிகளுக்கும் மானிய பொருள்கள் மற்றும் ஆய்வகம், வேளாண் பண்ணைகளுக்கும் சம்பா, குறுவை தொகுப்பு திட்டத்திற்கான பொருள்கள் கொள்முதல் கமிட்டி குழு DLAPC தலைவர் / மாவட்ட ஆட்சித்தலைவர் அனுமதி பெற்றும் ஒப்புதல் பெற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்ட வேளாண்துறை மூலம் விவசாயிகளுக்கு வழங்கக்கூடி மானிய இடுபொருட்கள் கொள்முதல் செய்யவேண்டும் கொள்முதல் செய்யப்பட்ட வேளண்டிய பொருட்கள் தரம் குறித்தும் ஆய்வு செய்தும், அரசு ஆணை உத்தரவுப் படியும் திருச்சிராப்பள்ளி மாவட்ட வேளாண்துறைக்கு தேவையான அனைத்து திட்டங்களுக்கு கொள்முதல் செய்ய வேண்டிய இடுபொருள்கள் / இதர திட்டத்தன் பொருட்கள் விவசாயிகளுக்கு மானியத்தில் வழங்கக்கூடிய உள்ளூர் தினசரி நாளிதழ் மூலம் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு செய்தும், முறையான டெண்டர் கோரப்படும் அதன் அடிப்படையில் மாவட்ட ஆட்சித்தலைவர் வேளாண்துறையின் கொள்முதல் DLAPC தலைவர் அனுமதி பெற்றும் ஒப்பந்தம் வழங்கிய பிறகுதான் வேளாண்துறை மூலம் மேற்கண் 14 திட்டங்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் / வேளாண்துறை DLAPC கொள்முதல் கமிட்டி தலைவர் அனுமதி பெறாமலும், ஒப்புதல் பெறாமலும் வேளாண்துறையின் மூலம் கடந்த 25.02.2021 முதல் 30.102023 வரை முன்னாள் வேளாண் இணை இயக்குநர் / கொள்முதல் கமிட்டி உறுப்பினர் செயலாளர் மூலம் மாவட்ட வேளண்துறைக்கு தேவையான 14 திட்டங்களுக்கு கொள்முதல் செய்யப்பட்டுள்ள பொருள்கள் மூலம் அனைத்து விதமான போலி ஆவணங்கள் மூலம் தரம் குறைவான தரம் இல்லாத பொருட்களை கூடுதல் விலைக்கு கொள்முதல் செய்யப்பட்டும் வேளாண் இணை இயக்குநர் தனக்கு வேண்டப்பட்ட

நிறுவனங்களிடம் லஞ்சம் பெற்றும் பெரும் முறைகேடு செய்தும் மாவட்ட ஆட்சித்தலைவர் / வேளாண்தொறை கொள்முதல் கமிட்டி குழு தலைவர் DLAPC அனுமதி பெறாமலும், ஒப்புதல் பெறாமலும் வேளாண்துறை இணை இயக்குநர் வேளாண்துறை மூலம் கொள்முதல் செய்யப்பட்ட மேற்கண்ட 14 வகையான திட்டங்களுக்கு பெரும் ஊழல் மற்றும் முறைகேடு செய்துள்ளது மீது உரிய விசாரணை செய்தும் நடவடிக்கை எடுக்குமாறும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன் என்ற புகாரினை அனுப்பியுள்ளார்.

மேலும், மேற்படி தனது புகாரின்பேரில் நடவடிக்கை எடுக்கும்பொருட்டு, மனுதாரர் திரு.அப்துல்லா என்பவர் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் WP(MD)No.9922/2024-ன்படி மனு தாக்கல் செய்து, அந்த மனு தொடர்பாக கடந்த 16.08.2024 அன்று சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை பிறப்பித்த உத்தரவில், ஊழல் தடுப்பு கண்காணிப்பு துறையானது மனுதாரர் கடந்த 23.11.2023 அன்று ஊழல் தடுப்பு கண்காணிப்பு துறைக்கு அனுப்பிய புகார்மனுவின் பேரில் துவக்கக்கட்ட விசாரணை மேற்கொள்ள உத்தரவிட்டதன்படியும், அதன் பேரில் இயக்குநர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, சென்னை அவர்களின் குறிப்பாணை எண்.PE.103/2024/AGRI/TR, dt.05.09.2024-ன்படியும் (1)திரு.ம.முருகேசன், முன்னாள் வேளாண்மை இணை இயக்குநர், திருச்சி மாவடடம், தற்போது வேளாண்மை கூடுதல் இயக்குநர் (ஓய்வு), (2)திருமதி.சு.மல்லிகா, முன்னாள் வேளாண்மை துணை இயக்குநர், (மத்திய திட்டம்), திருச்சி மாவட்டம், தற்போது மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை), கோயம்புத்தூர், (3) திருமதி.சு.சாந்தி, வேளாண்மை துணை இயக்குநர், (மத்திய திட்டம்) திருச்சி மாவட்டம், (4) திரு.வெ.இலட்சுமணசாமி, முன்னாள் வேளாண்மை துணை இயக்குநர், (மாநில திட்டம்), திருச்சி மாவட்டம் (விருப்ப ஓய்வு), (5) திரு.பொ.செல்வம், முன்னாள் வேளாண்மை துணை இயக்குநர், (மாநில திட்டம்) திருச்சி மாவட்டம் (ஓய்வு) ஆகியோர் மீது திருச்சி மாவட்ட வேளாண்மை துறையில் கடந்த 25.02.2021 முதல் 30.102023 வரை ஆம் ஆண்டுகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் / வேளாண்தொறை கொள்முதல் கமிட்டி குழு தலைவர் DLAPC அனுமதி பெறாமலும், ஒப்புதல் பெறாமலும் வேளாண்துறை சார்ந்த 14 வகையான திட்டங்களுக்கு சந்தை விலையைவிட கூடுதல் விலையில் கொள்முதல் செய்து வழங்கியதாக எழுந்த குற்றச்சாட்டு தொடர்பாக 23.09.2024 அன்று துவக்கக்கட்ட விசாரணை பதிவு செய்யப்பட்டது.

விவசாய துறையின் திட்டமான மாநில வேளாண்மை வளர்ச்சி திட்டத்தில் (State Agriculture Development Scheme (SADS) மட்டும் கடந்த 2022-23 ஆம் ஆண்டு வேளாண் இடுபொருட்களான பண்ணைக்கருவிகன், தார்பாலின், ஜிங்க சல்பேட், ஜிப்சம் ஆகிய இடுபொருட்களை சுமார் ரூ.2,25,00,000/- தொகைக்கு கொள்முதல் செய்துள்ளபோது, மாவட்ட அளவிலான கொள்முதல் குழு கூட்டம் நடத்தாமலும், (District Level Agricultural

Procurement Committee-DLAPC) கொள்முதல் கமிட்டி தலைவர் / மாவட்ட ஆட்சித்தலைவரின் அனுமதியும், ஒப்புதலும் பெறாமலும், அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள விதிமுறைகளை முறையாக கடைபிடிக்காமலும், தமிழ்நாடு ஒப்பந்தபுள்ளி சட்ட விதிமுறைகளில் (Tamilnadu Transparancy in Tenders Rules-2000) தெரிவிக்கப்பட்டுள்ள விதிமுறைகள் முறையாக கடைபிடிக்காமலும், தன்னிச்சையாக எதிரி–1 திரு.முருகேசன், முன்னாள் வேளாண் இணை இயக்குநர், திருச்சி (ஒய்வு) மற்றும் எதிரி–2 திரு.செல்வம், முன்னாள் வேளாண் துணை இயக்குநர் (மாநில திட்டம்), திருச்சி (ஒய்வு) ஆகியோர்கள் சந்தை விலையைவிட அதிகமான விலைக்கு தரமற்ற வேளாண்மை உபகரணங்களை கொள்முதல் செய்து, பயனாளிகளுக்கு வழங்கியுள்ளார். மேலும், சில பயனாளிகளுக்கு மேற்படி பண்ணைக் கருவிகள் உட்பட உபகரணங்கள் வழங்கமால், வழங்கியதாக தவறான கணக்கு காட்டியும் அதன் மூலம் அரசுக்கு நிதி இழப்பு ஏற்படுத்தியுள்ளார்கள் என்பதற்கு முகாந்திரம் கண்டறியப்பட்டுள்ளது.

மேற்படி SADS திட்டத்தில் எதிரி–1 திரு.முருகேசன், முன்னாள் வேளாண் இணை இயக்குநர், திருச்சி (ஒய்வு) மற்றும் எதிரி–2 திரு.செல்வம், முன்னாள் வேளாண் துணை இயக்குநர் (மாநில திட்டம்), திருச்சி (ஒய்வு) ஆகியோர் சேர்ந்து பண்ணைக்கருவிகளான (கடப்பாரை–1, மண்வெட்டி–1, களைக்கொத்து–1, கதிர் அறுவாள்–2, இரும்பு சட்டி–1) அடங்கிய 3416 தொகுப்புகள் ரூ.1,01,13,682/- தொகைக்கு OZONE COMMERCIALS என்ற நிறுவனத்திலிருந்து கொள்முதல் செய்துள்ளனர். ஆனால், OZONE COMMERCIALS என்ற நிறுவனம், RK Traders, Chennai மற்றும் Rebala Nutri Foodee Pvt, Ltd., Thiruchengode ஆகிய இரண்டு நிறுவனங்களிலிருந்து ஒரு பண்ணைக் கருவி தொகுப்பானது ரூ.2100/– என்ற விலைக்கு கொள்முதல் செய்து, OZONE COMMERCIALS என்ற நிறுவனம் கூடுதல் விலை வைத்து ரூ.2,995/– ரூபாய்க்கு விற்பனை செய்துள்ளனர். மேற்படி அலுவலர்கள் 1 மற்றும் 2 ஆகியோர் இதை சரிபார்த்து வாங்க தவறியதன் மூலம் அரசுக்கு தோராயமாக ரூ.30,00,000/– இழப்பு ஏற்படுத்தியுள்ளார்கள்.

மேலும், இத்திட்டத்தின்படி கொள்முதல் செய்யப்பட்ட பண்ணைக்கருவிகள் விவசாயிகளுக்கு மானியம் நீங்கலாக ரூ.1532/–க்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. அதில், 14 வேளாண் வட்டாரங்களிலும் 3416 தொகுப்பு பண்ணைக்கருவிகள் வாங்கிய பயனாளிகளில் 100 பயனாளிகளை விசாரணை செய்ததில், 34 பயனாளிகள் பண்ணைக்கருவிகள் பெறவில்லை என தெரிவித்தனர். இதன் மூலம் 34 பயனாளிகளுக்கான மானியத்தொகை (34x1532=52088/-) ரூ.52,088/–ஐ முறைகேடு செய்து அரசுக்கு நிதி இழப்பு ஏற்படுத்தியுள்ளார்கள்.

ஆகவே இத்திட்டத்தில் முறைகேடு செய்த குற்ற அலுவலர்-1 திரு.முருகேசன், முன்னாள் வேளாண் இணை இயக்குநர், திருச்சி (ஓய்வு) மற்றும் குற்ற அலுவலர்-5 திரு.செல்வம், முன்னாள் வேளாண் துணை இயக்குநர் (மாநில திட்டம்), திருச்சி (ஓய்வு) ஆகியோர் மீது குற்ற வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொள்ள துவக்கக்கட்ட விசாரணையில் பரிந்துரைந்துரை செய்ததன்பேரில், அரசாணை எண்.G.O (3D) No.36, Agriculture-Farmers Welfare (AA2) Department, dated 09.04.2025-ன்படி வழக்கு பதிவு செய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேலும், மனுதாரரின் மனு மீதான இத்துவக்கக்கட்ட விசாரணையில் (1) தேசிய வேளாண் வளர்ச்சி திட்டம் (NADP), (2)தேசிய உணவு பாதுகாப்பு இயக்கம் (NSFM) திட்டம், (3)அட்மா திட்டம், (5)கலைஞரின் ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம், (6)TNIAMP (Tamilnadu Irrigated Agriculture Modernisation Programme) திட்டம், (7) குறுவை தொகுப்புத் திட்டம், (8) சம்பா தொகுப்புத் திட்டம், (9) வேளாண்மைத்துறை நெற்குப்பை திட்டம், (10) புதூர் உத்தமனூர் பண்ணை பொருள் கொள்முதல் திட்டம், (11), (12), (13), (14) வேளாண்மைத் துறையின் ஆய்வகங்கள் ஆகிய திட்டங்களில் நடைபெற்றதாக கூறப்பட்ட முறைகேடுகளுக்கு ஆதாரமாக எந்தவித ஆவண சாட்சியங்களோ, வாய்மொழி சாட்சியங்களோ கண்டறியப்படாததால், வேளாண்மை அலுவலர்கள் 2, 3 மற்றும் 4 ஆகியோருக்கு எதிரான நடவடிக்கையை கைவிடும்படி பரிந்துரை செய்யப்பட்டது.

எனவே, மேற்படி பொது ஊழியரான எதிரி-1 திரு.முருகேசன், முன்னாள் வேளாண் இணை இயக்குநர், திருச்சி (ஓய்வு) மற்றும் எதிரி-2 திரு.செல்வம், முன்னாள் வேளாண் துணை இயக்குநர் (மாநில திட்டம்), திருச்சி (ஓய்வு) ஆகியோர் சேர்ந்து பண்ணைக்கருவிகளான (கடப்பாரை-1, மண்வெட்டி-1, களைக்கொத்து-1, கதிர் அறுவாள்-2, இரும்பு சட்டி-1) அடங்கிய 3416 தொகுப்புகள் ரூ.1,01,13,682/- தொகைக்கு OZONE COMMERCIALS என்ற நிறுவனத்திலிருந்து கொள்முதல் செய்துள்ளனர். ஆனால், OZONE COMMERCIALS என்ற நிறுவனம், RK Traders, Chennai மற்றும் Rebala Nutri Foodee Pvt, Ltd., Thiruchengode ஆகிய இரண்டு நிறுவனங்களிலிருந்து ஒரு பண்ணைக் கருவி தொகுப்பானது ரூ.2100/- என்ற விலைக்கு கொள்முதல் செய்து, OZONE COMMERCIALS என்ற நிறுவனம் கூடுதல் விலை வைத்து ரூ.2,995/- ரூபாய்க்கு விற்பனை செய்துள்ளனர். மேற்படி அலுவலர்கள் 1 மற்றும் 2 ஆகியோர் இதை சரிபார்த்து வாங்க தவறி குற்றமுறு நம்பிக்கை மோசடி செய்து அரசுக்கு தோராயமாக ரூ.30,00,000/- இழப்பு ஏற்படுத்தியும், மேலும், இத்திட்டத்தின்படி கொள்முதல் செய்யப்பட்ட பண்ணைக்கருவிகள் விவசாயிகளுக்கு மானியம் நீங்கலாக ரூ.1532/-க்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. அதில், 14 வேளாண் வட்டாரங்களிலும் 3416 தொகுப்பு

பண்ணைக்கருவிகள் வாங்கிய பயனாளிகளில் 100 பயனாளிகளை விசாரணை செய்ததில், 34 பயனாளிகள் பண்ணைக்கருவிகள் பெறவில்லை என தெரிவித்தனர். இதன் மூலம் 34 பயனாளிகளுக்கான மானியத்தொகையினை (34x1532=52088/-) ரூ.52,088/-ஐ முறைகேடு செய்து அரசுக்கு நிதி இழப்பு ஏற்படுத்தியும் உள்ளார்கள்.

ஆகையால், திருச்சி, ஊ.த.க. பிரிவு குற்ற எண். 05/2025, ச/பி ஊழல் தடுப்பு சட்டம் 1988 (as amended in 2018) u/s 13 (1) (c) r/w 13(2) மற்றும் இந்திய தண்டனை சட்டம் u/s 420, 409 r/w 34-ன்படி எதிரி-1 திரு.முருகேசன், முன்னாள் வேளாண் இணை இயக்குநர், திருச்சி (ஓய்வு) மற்றும் எதிரி-2 திரு.செல்வம், முன்னாள் வேளாண் துணை இயக்குநர் (மாநில திட்டம்), திருச்சி (ஓய்வு) ஆகியோர் மீது இன்று 19,05,2025ம் தேதி 14.00 மணிக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. (ஒம்.) கோ.மணிகண்டன், காவல் துணைக்கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு, திருச்சி.

இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் அசல், திரு.எம்.அப்துல்லா, எண்.1222, கிழக்கு தெரு, புத்தாநத்தம் அஞ்சல், மணப்பாறை வட்டம், திருச்சி மாவட்டம் என்பவரது 23.11.2023 நாளிட்ட புகார்மனு அசல், அரசாணை எண்.G.O (3D) No.36, Agriculture-Farmers Welfare (AA2) Department, dated 09.04.2025-ன்படி நகல் ஆகியவைகளை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்கு சிறப்பு நீதிமன்றம், திருச்சி அவர்களுக்கு சமர்பித்தும், இதர நகல் காவல் கண்காணிப்பாளர், மத்திய சரகம், ஊ.த.க. துறை, சென்னை அவர்களுக்கும், மற்றொரு நகல்கள் புலன் விசாரணை அதிகாரிக்கும், வழக்கு கோப்பிலும் வைக்கப்பட்டது.

19/5/25
(GNANAKANDAN)
Dy. Supt of Police
I/c AC, Trichy